


**11.04.2025**

**தலைப்பு செய்திகள்**

1. **குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தமது** ஸ்லோவேக்கியா நாட்டு அரசுமுறை பயணத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளார்.

2. **மகளிருக்கு ஆளுமை வழங்கும் நடவடிக்கைகளை மத்திய அரசு** முனைப்புடன் முன்னெடுத்துச் செல்வதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

3. **தமிழ்நாட்டில் பள்ளி கல்வித்துறை சார்பில் 85 கோடி ரூபாய்** மதிப்பிலான 326 நூலக கட்டிடங்களை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

4. **திமுக துணை பொதுச்செயலாளர் பொறுப்பிலிருந்து அமைச்சர்** திரு. க.பொன்முடி விடுவிக்கப்பட்டு, திருச்சி என்.சிவா நியமிக்கப்பட்டுள்ளார்.

5. **ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில்** சென்னையில் இன்றிரவு ஏழரை மணிக்கு சென்னை சூப்பர்கிங்ஸ் - கொல்கத்தா நைட்ரைடர்ஸை எதிர்கொள்கிறது.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖

**குடியரசு தலைவர்**

**குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு** தமது ஸ்லோவேக்கிய அரசுமுறை பயணத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளார்.

30 ஆண்டுகளுக்கு பிறகு ஸ்லோவேக்கியா நாட்டிற்கு இந்தியா சார்பில் மேற்கொண்ட இப்பயணம் வரலாற்று சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது.

குடியரசு தலைவர் தமது பயணத்தின் போது அந்நாட்டு அதிபர், பிரதமர் உள்ளிட்டோருடன் பிரதிநிதி நிலையிலான பேச்சுவார்த்தைகளை மேற்கொண்ட நிலையில் 2 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

குடியரசு தலைவருக்கு ஸ்லோவேக்கியா நாட்டின் உயரிய முனைவர் விருதும் வழங்கி கவுரவிக்கப்பட்டது.

ஸ்லோவேக்கியா, இந்திய வர்த்தக கூட்டமைப்பு நிகழ்வில் உரையாற்றிய குடியரசு தலைவர், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவிற்கு நிரந்தர உறுப்பினர் பதவிக்கு ஸ்லோவேக்கியாவின் ஆதரவை எடுத்துரைத்தார்.

குடியரசு தலைவரின் இப்பயணத்தின் மூலம் எ◌ஃ.கு, ரயில்வே, உயிரி எரிபொருள், நலவாழ்வு, சுற்றுலா, படைப்பாற்றல், கலைகள் போன்ற துறைகளில் இருநாடுகளுக்கு இடையிலான வர்த்தக வாய்ப்புகள் வலுவடைந்துள்ளன.

Bratislava-வில் வெளிநாடுவாழ் இந்தியர்களிடையே உரையாற்றிய குடியரசு தலைவர், ஸ்லோவேக்கியாவின் வளர்ச்சியில் இந்திய சமூகத்தினரின் பங்களிப்பு குறித்து அந்நாட்டு தலைவர்கள் எடுத்துரைத்தது குறித்து பெருமிதம் தெரிவித்தார்.

இந்திய வம்சாவளியினரின் சிறப்பான பங்களிப்பால் இந்தியா ஸ்லோவேக்கியா நாடுகளிடையிலான இருதரப்பு நட்புறவு வலுவடைந்ததாக குடியரசு தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖

**பிரதமர்**

**மகளிருக்கு ஆளுமை வழங்கி புத்துயிர்** அளிக்கும் நடவடிக்கைகளை மத்திய அரசு முனைப்புடன் முன்னெடுத்துச் செல்வதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

உத்தரபிரதேச மாநிலம் வாரணாசியில் 3 ஆயிரத்து 880 கோடி ரூபாய் மதிப்பிலான, 44 புதிய திட்டங்களுக்கு இன்று பிரதமர் அடிக்கல் நாட்டி பேசினார்.

இந்நிகழ்வில் 70 வயதிற்கு மேற்பட்ட 3 மூத்த குடிமக்களுக்கு ஆயுஷ்மான் பாரத் காப்பீடு திட்ட அடையாள அட்டைகளை வழங்கியதோடு, புவி குறியீடு சான்றிதழ்களை பயனாளிகளுக்கு வழங்கினார்.

அம்மாநில பால்வளத்துறை விவசாயிகளுக்கு 106 கோடி ரூபாய் மதிப்பிலான ஊக்கத்தொகைக்கான பண பரிவர்த்தனையையும் பிரதமர் மேற்கொண்டார்.

❖❖❖❖❖❖

**ஜெய்சங்கர்**

**உலகநாடுகளின் மீதான அமெரிக்காவின்** அடிப்படை அணுகுமுறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் தாக்கம் அனைத்து பிரிவுகளிலும் பிரதிபலிப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உலகளாவிய தொழில்நுட்ப உச்சிமாநாட்டில் உரையாற்றிய அமைச்சர், அமெரிக்கா மிகப்பெரிய பொருளாதார நாடாகவும், தொழில்நுட்ப செயல்பாட்டில் மிகப்பெரிய பங்குவகிப்பதாலும், சர்வதேச நாடுகள் தொழில்நுட்ப ரீதியாக பாதிக்கப் பட்டுள்ளதாக கூறினார்.

நவீன தொழில்நுட்பங்கள் வர்த்தக பிரிவின் பாதுகாப்பை பாதித்திருப்பதாகவும் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖

**பியூஷ்கோயல்**

**நாட்டின் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் புதிய** தொழில்நுட்பம் படைப்பாற்றல் திறனுடன் முன்னேற்றப் பாதையில் செல்வதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இந்திய - இத்தாலிய வணிகம், அறிவியல் தொழில்நுட்ப கூட்டமைப்பு மாநாட்டில் இன்று உரையாற்றியஅவர், நம்நாட்டின் ஸ்டார்ட் அப் தொழிற்சாலைகளின் சூழலால் வணிகம் பெருமளவு மேம்பட்டு உலகளாவிய நாடுகளுக்கு வர்த்தகம் விரிவுப் படுத்தப்படும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

வர்ச்சியடைந்த பாரத பாதையில் நாட்டின் வர்த்தகம் சார்ந்த பேச்சுவார்த்தைகள் முன்னெடுத்துச் செல்லப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

**அமித்ஷா**

**முதுபெரும் காங்கிரஸ் தலைவர் குமரிஅனந்தனின்** மறைவிற்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா சென்னையில் இன்று அஞ்சலி செலுத்தினார்.

பி.ஜே.பி. மூத்த தலைவரும், குமரிஅனந்தனின் புதல்வியுமான, டாக்டர் தமிழிசை சவுந்தர்ராஜனின் இல்லத்தில் உள்ள குமரி அனந்தனின் படத்திற்கு திரு. அமித்ஷா மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

❖❖❖❖❖❖

**மன்சுக் மாண்டவியா**

**மத்திய அரசின் நடவடிக்கைகளால், சுகாதார வசதிகள்** மக்களுக்கு இலகுவாகவும், மலிவாகவும் கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

ஹரியானா மாநிலம் ஃபரீதாபாத்தில் மருத்துவக்கல்லூரி நிகழ்ச்சியில் இன்று பேசியஅவர், தேச உணர்விற்கு மருத்துவர்கள் முன்னுரிமை வழங்கவேண்டுமென்று குறிப்பிட்டார்.

ஒரு நாடு வளர்ச்சி பெற வேண்டுமென்றால் அந்நாட்டின் குடிமக்கள் ஆரோக்கியமாக இருப்பது அவசியம் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

மருத்துவர்கள் மனித நேயத்துடன் நடந்து கொள்வதன் அவசியத்தையும் டாக்டர் மாண்டவியா வலியுறுத்தினார்.

❖❖❖❖❖❖

**முதலமைச்சர்**

**முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், பள்ளி கல்வித்துறை** சார்பில் 84 கோடியே 76 லட்ச ரூபாய் செலவில் அனைத்து மாவட்டங்களிலும் கட்டப்பட்டுள்ள 326 நூலக கட்டிடங்களை சென்னை தலைமை செயலகத்திலிருந்து இன்று காணொலி மூலம் திறந்து வைத்தார்.

இந்துசமய அறநிலையத்துறை சார்பில் 21 திருக்கோவில்களில் காணிக்கையாக பெறப்பட்ட ஆயிரத்து 74 கிலோ சுத்த தங்க கட்டிகளை பாரத ஸ்டேட் வங்கியின் தங்க முதலீடு திட்டத்தில், முதலீடு செய்ததற்கான பத்திரங்களை திருக்கோவில் நிர்வாகிகளிடம் இன்று வழங்கினார்.

❖❖❖❖❖❖

**க.பொன்முடி**

**திமுக துணை பொதுச்செயலாளர்** பொறுப்பிலிருந்து மாநில வனத்துறை அமைச்சர் திரு. க.பொன்முடி விடுவிக்கபடுவதாக கட்சித்தலைவரும், முதலமைச்சருமான திரு.மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

மகளிருக்கு எதிரான சில கருத்துக்களை திரு. பொன்முடி தெரிவித்ததாக சமூக வலைதளத்தில் வெளியான கருத்துக்களுக்கு பல்வேறு தரப்பினர் கண்டனம் தெரிவித்ததையடுத்து இந்நடவடிக்கை.

திமுக-வின் துணை துணை பொதுசெயலாளராக நடாளுமன்ற உறுப்பினரான திருச்சி என்.சிவா தற்போது நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

❖❖❖❖❖❖

**ஆர்.காந்தி**

**ராணிப்பேட்டை நகராட்சி பாலாற்றங்கரையில்** அமைந்துள்ள தேசிங்கு ராஜா மற்றும் ராணிபாய் நினைவிட புனரமைப்பு பணிகளை மாநில கைத்தறி துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர்.காந்தி இன்று ஆய்வுசெய்தார்.

பழமை மாறாமல் புனரமைக்கும் பணிகளில் 30 சதவிகிதம் முடிவடைந்த நிலையில் பழுதுபார்க்கும் பணிகள் குறித்தும், மின்விளக்கு பொருத்தும் பணிகள் குறித்தும் அமைச்சர் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசியஅமைச்சர், அடுத்த கட்ட பணிகளுக்காக ஆறரை கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக கூறினார்.

இப்பணிகள் அனைத்தும் 2 மாதத்திற்குள் முடிக்க அமைச்சர் அலுவலர்களை அறிவுறுத்தினார்.

❖❖❖❖❖❖

**உயர்நீதிமன்றம்**

**தமிழகத்தில் அரசு திட்டங்களுக்காக** கையகப்படுத்திய நிலங்களுக்கு இழப்பீடாக 806 கோடி ரூபாய் வழங்கவேண்டியுள்ளது என மாநில அரசு சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

ராணிப்பேட்டையில் பெல் நிறுவன ஆலை அமைக்க கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு இழப்பீடு வழங்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட தனிநபர் மனுமீதான விசாரணையின்போது நிலுவையில் உள்ள இழப்பீடு தொகைகளை விரைந்து வழங்க ஏதுவாக குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து அறிக்கை தாக்கல் செய்யப்படும் என்றும் அரசு தலைமை வழக்கறிஞர் தெரிவித்தார்.

இதனை பதிவுசெய்த நீதிமன்றம் இவ்வழக்கு விசாரணையை வரும் 28-ம் தேதிக்கு ஒத்திவைத்துள்ளது.

❖❖❖❖❖❖

**பங்குனி உத்திரம்**

**தமிழகத்தில் முருகன் திருக்கோவில் உட்பட** பல்வேறு திருக்கோவில்களில் பங்குனி உத்திர விழா இன்று பக்தி சிரத்தையடன் கொண்டாடப்படுகிறது.

பக்தர்கள் பால்காவடி எடுத்தும், அலகு குத்தியும் தங்களது நேர்த்திக்கடனை செலுத்தி வருகின்றனர்.

திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவில், திருச்சி குமார வயலூர் முருகன் திருக்கோவில், தஞ்சை சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாத சுவாமி உள்ளிட்ட முருகன் கோவில்களில் பக்தர்கள் நீண்டவரிசையில் நின்று சுவாமி தரிசனம் மேற்கொண்டு வருகின்றனர்.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில் பங்குனி உத்திர தேரோட்டம் இன்றுமாலை நடைபெறவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖

**மீன்பிடி தடைக்காலம்**

**தமிழகத்தில் கிழக்கு கடற்கரை பகுதியில் மீன்பிடி** தடைக்காலம் வரும் 15-ம் தேதி முதல் நடைமுறைக்கு வருகிறது.

வரும் ஜுன் 14-ம் தேதிவரை 61 நாட்கள் நடைமுறையில் இருக்கும் இம்மீன்பிடி தடைக்காலத்தில் கடலில் மீன்பிடிக்க விசைப்படகுகள் மற்றும் இழுவை படகுகளுக்கு தடைவிதிக்கப் படுகிறது.

இத்தடைக்காலத்தை ஒட்டி கன்னியாகுமரி மாவட்டம் சின்னமுட்டம் கிராமத்தில் 350 மீன்பிடி படகுகள் கரையில் நிறுத்தப்பட இருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**.. வாய்ஸ் ..**

இதனிடையே ராமநாதபுரம் மாவட்டத்தில் கடலுக்குள் சென்றுள்ள விசைப்படகுகள் நாளைக்குள் கரைக்கு திரும்ப வேண்டுமென மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

❖❖❖❖❖❖

**இருவரி**

**பெரம்பலூர், திருப்பத்தூர், சிவகங்கை உள்ளிட்ட** மாவட்டங்களில் பொதுவிநியோகத்திட்ட குறைதீர்கூட்டம் நாளை நடைபெறுகிறது.

**காஞ்சிபுரம்** மாவட்டத்தில், மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர் நாள் கூட்டம், வரும் 17-ம் தேதி நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி.கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

**புதுக்கோட்டையில்** கைப்பந்து விளையாட்டு வீரர் பயிற்சி பெறுவதற்கான தேர்வு வரும் 28-ம் தேதி நடைபெறும் என, ஆட்சித்தலைவர் திருமதி.அருணா கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில்** சென்னையில் இன்றிரவு ஏழரை மணிக்கு சென்னை சூப்பர்கிங்ஸ் - கொல்கத்தா நைட்ரைடர்ஸை எதிர்கொள்கிறது.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தலைவராக மகேந்திரசிங் தோனி மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

அணி தலைவராக இருந்த ருத்ராஜ் காயம் காரணமாக விலகியதையடுத்து இந்நடவடிக்கை.

❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**